பெரியார் பூங்காவை மீட்டுத் தரவேண்டும் – ஏழை எளிய மக்கள்

எல்லா நிலைகளிலும் உயர திட்டங்களை உருவாக்கித் தருகிறார் முதல்வர்!

சட்டப்பேரவையில் – வேலூர் தொகுதி கழக உறுப்பினர் ப.கார்த்திகேயன் பேச்சு!

சென்னை, ஏப்.3- சட்டப்பேரவையில் வேலூர் தொகுதி கழக உறுப்பினர் ப.கார்த்திகேயன் பேசுகையில், ஏழை எளிய மக்கள் எல்லா நிலைகளிலும் உயர சிறப்பான திட்டங்களை உருவாக்கி தருகிறார் முதல்வர் என்று குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் வேலூர் தொகுதி கழக உறுப்பினர் ப.கார்த்திகேயன் பேசியதாவது:-

எங்களுடைய பெரியாரை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) பேரறிஞர் அண்ணா அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணாவின் தம்பியாக வாழ்ந்து மறைந்த எங்கள் தலைவரை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் தளபதி அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி), நம்முடைய கழகத்தின் பொதுச் செயலாளர் - நீர்வளத் துறை அமைச்சர் அண்ணன் அவர்களை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி), தமிழ்நாடு துணை முதலமைச்சர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் மற்றும் இளைஞரணி மாநிலச் செயலாளர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திருவண்ணாமலை மாவட்டக் கழகச் செயலாளரும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி), நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களை வணங்கி, ராணிப்பேட்டை மாவட்டக் கழகச் செயலாளர் மற்றும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களை வணங்கி, அமைச்சர் பெருமக்களை வணங்கி, அரசு கொறடா அவர்களை வணங்கி, எங்களுடைய மாவட்ட கழகச் செயலாளர் அணைக்கட்டுத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சகோதரர் அவர்களை வணங்குகிறேன்.

எங்களுடைய மாவட்டத்தின் அவைத் தலைவர், வேலூர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முகமது சகி அண்ணன் அவர்களையும், என்னை வேலூர் சட்டமன்ற உறுப்பினராக இரண்டாவது முறையாகத் தேர்ந்தெடுத்து சட்டமன்றத்திற்கு அனுப்பிய எனது வேலூர் தொகுதி வாக்காளப் பெருங்குடி மக்களையும், எங்களுடைய கழகத் தோழர்கள் மற்றும் கூட்டணிக் கட்சித் தோழர்களையும் வணங்குகிறேன்.

எனக்கு பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கைகளின் மீதான விவாத தத்தில் பேசுவதற்கு அனுமதி தந்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதல்வரின் காலை உணவு திட்டம்!

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள், ஏழை எளிய மக்கள் சிறப்பாக இருக்க வேண்டுமென்று சிந்தித்தார். இந்த நான்கு ஆண்டு காலத்தில் சிறப்பான முறையில் ஆட்சி செய்து கொண்டிருக்கிற நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான், பீடித் தொழிலாளர்கள், கூலி வேலை செய்பவர்கள், மூட்டைத்தூக்குபவர்கள், ரிக்ஷா ஓட்டுகிற தொழிலாளிகள் உள்ளிட்ட ஏழை எளிய மக்களின் பள்ளிச் செல்லும் குழந்தைகளுக்கு காலை உணவே இல்லை என்பதைப் பற்றி சிந்தித்து, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின்கீழ், 2025-2026 ஆம் ஆண்டில் 600 கோடி ரூபாயை காலை உணவுத் திட்டத்திற்காக நிதியொதுக்கித் தந்திருக்கிறார்கள் என்று சொன்னால், (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எந்த அளவிற்குச் சிந்தித்து செயல்படுகிறார்கள் என்பதை பேரவைத் துணைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏதோ ஒரே மாதிரியான உணவு வழங்கப்படுவதில்லை, காலை உணவு என்று சொன்னால் ஒவ்வொரு நாளும், அதாவது, திங்கட்கிழமை அன்று அரிசி உப்புமா, செவ்வாய்க்கிழமை அன்று கிச்சடி, புதன்கிழமை அன்று பொங்கல், வியாழக்கிழமை அன்று கோதுமை உப்புமா, வெள்ளிக்கிழமையன்று சேமியா உப்புமா என, அந்த அளவிற்கு ஏழையெளியவர்களின் குழந்தைகள் சாப்பிட வேண்டும் என்பதை நினைத்து செயல்படுபவர் தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

பெண்கள் முன்னேற திட்டங்கள்!

ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை படித்துவிட்டால் போதாது; உயர் கல்விக் கற்பதற்குச் செல்ல வேண்டுமென்று சொல்லி, விடியல் பயணம், மாதம் ஆயிரம் ரூபாய் பெண்களுக்கு மட்டுமல்ல; ஆண்களுக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் தந்து ரூ.420 கோடியை 2025-2026 ஆம் ஆண்டில் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் என்று சொன்னால், ஏழை, எளிய மக்கள் எல்லா நிலைகளிலும் உயர வேண்டும்; உயர் கல்வி பயில செல்ல வேண்டும்; உயர் கல்விப் பயில சென்றால்தான், இந்தக் கணினி உலகத்தில் வாழ முடியும் என்பதைக் கருத்தில்கொண்டு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள். குடும்பத்திலுள்ள பெண்கள் அனைவரும் உயர் கல்வி கற்க செல்ல வேண்டும் என்றுதான் இந்தத் திட்டத்தை உருவாக்கித் தந்திருக்கிறார்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

அதேபோல, பெண்களுக்காகத்தான் இந்த ஆட்சி. எல்லா நிலையிலும் பெண்கள் உயர வேண்டும் என்று கருதி, ஒரு குடும்பத்தைக் காப்பாற்றுபவர் தாய் என்ற காரணத்தினால்தான், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பெண்களுக்காகவும், தாய்மார்களுக்கும்தான் பல்வேறு திட்டங்களைத் தீட்டி, இந்த 4 ஆண்டு காலத்தில் செயல்படுத்திக் கொண்டு வருகிறார்கள். அதனால் தான், பெண்கள் பெயரில் 10 இலட்சம் ரூபாய் வரையிலான சொத்துகள் பதிவு செய்யப்பட்டால், 1% வரி குறைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். இதுவரை இது போன்ற வரலாறு கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான் அந்த வரலாற்றைப் படைத்திருக்கிறார்கள்.

ரூ. 37 ஆயிரம் கோடி சுழல் நிதி ஒதுக்கீடு!

மகளிர் கட்டணமில்லாமல் பேருந்தில் செல்ல மகளிர் விடியல் பயணம் திட்டத்தின்கீழ், 2025-2026 ஆம் ஆண்டிற்கு 3,600 கோடி ரூபாயை நிதிநிலை அறிக்கையில் (மேசையைத் தட்டும் ஒலி) ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் என்று சொன்னால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செய்த சாதனைகளால், இந்த 4 ஆண்டு காலத்தில் ஏழையெளிய மக்களெல்லாம் எந்த அளவிற்கு உயர்ந்திருக்கிறார்கள் என்பதை பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரியப்படுத்திக் கொள்கிறேன். அதேபோல, சுழல் நிதியைப் பொறுத்தவரையில், எல்லா குடும்பங்களும் சிறப்பாக இருக்கவேண்டும் என்பதற்காக, 2025-2026 ஆம் ஆண்டுக்கு சுழல் நிதி 37,000 கோடி ரூபாய் ஒதுக்கித் தந்திருக்கிறார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

இல்லத்தரசிகளுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்கீழ் ரூ.1,000/-. அது எத்தனை பேருக்கு என்றால், 1 கோடியே 15 இலட்சம் குடும்பத் தலைவிகளுக்கு வழங்கப்படுகிறது. அதற்காக 13,807 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 1 கோடி ரூபாய் அல்ல, 2 கோடி ரூபாய் அல்ல, 100 கோடி ரூபாய் அல்ல, 200 கோடி ரூபாய் அல்ல, 13,807 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்து, அவர்கள் சிறப்பாக வாழ வேண்டுமென்று நினைத்துத் தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அதைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து, கல்விக் கடன். இந்த நிதியாண்டு 2025-2026-ல் ஒரு இலட்சம் கல்லூரி மாணாக்கர்களுக்கு 2,500 கோடி ரூபாய் அளவிற்கு வங்கிகள் கல்விக் கடன் வழங்குவதை உறுதி செய்யும் என்று அறிவித்திருக்கிறார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

சிறப்பான முறையில் கலைஞர் நினைவிடம்!

பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை ஆகியவை தொடர்பான மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் எனக்குப் பேச வாய்ப்பளித்ததற்கு நன்றி. பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறையை எடுத்துக்கொண்டால், பொதுப் பணித் துறைக்கு 2,457 கோடி ரூபாயையும் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறைக்கு 20,722 கோடி ரூபாயையும் ஒதுக்கித் தந்திருக்கிறார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். இந்தியாவிலேயே சிறந்த துறைகளாக நம்முடைய பொதுப் பணித் துறையும், நெடுஞ்சாலைத் துறையும் வர வேண்டும் என்பதற்காகத்தான் முதல மைச்சர் அவர்கள் இவ்வளவு நிதியை ஒதுக்கித் தந்து செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் நம்மைவிட்டு மறையும்போது, அண்ணாவிற்கு அருகிலேயே அவர் உறங்க வேண்டுமென்பதற்காக முயற்சி எடுத்த நம்முடைய முதலமைச்சர் அவர்கள், அன்றைக்கு இருந்த ஆளுங்கட்சியிடம் இடம் கேட்டார்; அவர்கள் தரவில்லை. அதற்கு முயற்சி எடுத்துக்கொண்டு போராடி, என் தலைவருக்கு இடத்தைப் பெற்று வழங்கியவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த இடத்தைப் பெற்று, அங்கு அடக்கம் செய்ய வேண்டுமென்று, அப்போது மாவட்டச் செயலாளராக இருந்த தற்போதைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களை அழைத்து அந்த வேலையைக் கவனிக்குமாறு சொன்னார்கள். 2021 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், மாவட்டச் செயலாளராக இருந்த அவருக்கு பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் பொறுப்பு வழங்கப்பட்டது.

ஏற்கெனவே, கலைஞர் அவர்களின் நல்லடக்கப் பணிகளைக் கவனித்த காரணத்தால், தற்போது பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்று, நம்முடைய தலைவர் கலைஞரின் நினைவகத்தைக் கட்டினார். (மேசையைத் தட்டும் ஒலி) நினைவகம் எவ்வாறு கட்டப்பட்டது என்றால், நம்முடைய முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்பேரில் சிறப்பான முறையில் அது கட்டப்பட்டிருக்கிறது. அந்த பணிகளை நாமும் பார்த்தோம். சிறப்பான முறையில் செய்ததுடன், அந்த இடத்தில் தலைவர் கலைஞர் குறித்த சிறப்பான செய்திகளையும் இடம்பெறச் செய்துள்ளார். முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் 1980-ல் கடற்கரையில் பேசும் போது, 'தலைவர் கலைஞர் அவர்கள் கடலின் மேலேயும் கப்பல் ஓட்டுவார், கடலுக்கடியில் தண்ணீருக்குக் கீழேயும் கப்பல் ஓட்டுவார்' என்று சொன்னார்கள். அந்த வகையில் நம்முடைய தலைவர் தளபதி முதலமைச்சர் அவர்கள், தலைவருக்கு அமைத்த நினைவிடத்தைப் பார்த்தோமெனில், அங்குள்ள அருங்காட்சியகத்தில் கலைஞரின் சாதனைகள் குறித்த புகைப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன. அங்கு நூலகமும் அமைக்கப்பட்டுள்ளது. அவர் ஐம்பதாண்டுகளுக்கும் மேலாக செய்த சாதனைகளை, மக்கள் இரயில்மீது அமர்ந்தபடியே மக்கள் பார்க்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

நம்முடைய தலைவர் அவர்களின் சாதனையை தமிழ்நாடு மட்டுமல்ல, இந்தியா மட்டுமல்ல, உலகத்திலுள்ள தமிழர்கள் அனைவரும் அவற்றைப் பார்த்து நெகிழ்ந்து போகிற அளவிற்கு உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) யாருக்கும் கிடைக்காத அந்த பாக்கியம், எங்களுடைய தலைவர் கலைஞருக்கு கிடைத்திருக்கி றது. (மேசையைத் தட்டும் ஒலி) அவர் அவ்வாறு தமிழ்நாட்டு மக்களுக்காக உழைத்த காரணத்தினால்தான் அத்தகையதொரு அமைப்பு அவருக்குக் கிடைத்திருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொதுப் பணித் துறை மூலமாக அதை உருவாக்கியுள்ளார். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலைஞர் நூற்றாண்டு நூலகம்!

அடுத்து, மதுரையில் அமைக்கப்பட்டுள்ள தலைவர் கலைஞர் நூற்றாண்டு நூலகம். 127 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட அந்த நூலகத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள். திறப்பு விழாவின்போது 25 ஆயிரம், 30 ஆயிரம் மாணவச் செல்வங்கள் கலந்துகொண்டார்கள். அப்போது முதலமைச்சர் அவர்கள், 'நீங்கள் எல்லா நிலைகளிலும் உயர வேண்டும் என்பதற்காகவே, கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை அமைத்திருக்கிறேன். நீங்கள் அதைப் பயன்படுத்திக்கொண்டு, I.A.S., I.P.S., ஆக வர வேண்டும். உங்களிடத்திலிருந்து திருட முடியாத சொத்து எதுவெனில், அது கல்வி மட்டும்தான்' என்று அவர்களுக்குச் சொல்லி திறந்து வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பொதுவாக ஜல்லிக்கட்டு நடைபெறும்போது, ஆங்காங்கே barricade அமைக்கப்படும். முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பொதுப் பணித் துறைமூலம், அது நிரந்தரமாக கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கமாக அமைக்கப்பட்டுள்ளது.

கண்ணாடி இழை பாலம்!

அடுத்து, கிண்டியில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு நினைவு மருத்துவமனை. 1,000 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனை 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பொதுப் பணித் துறையால் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது. 2000 ஆம் ஆண்டில் தலைவர் கலைஞர் அவர்கள் திருவள்ளுவர் சிலையைத் திறந்து வைத்தார்கள். அதற்கு தற்போது 25 ஆவது ஆண்டு Silver Jubilee கொண்டாடுகிறோம். அதற்கு மெருகேற்றும் வகையில், நம்முடைய முதலமைச்சர் அவர்கள், விவேகானந்தர் பாறைக்கும், திருவள்ளுவர் சிலைக்குமிடையே 37 கோடி ரூபாய் மதிப்பிலான கண்ணாடி இழை பாலத்தை அமைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) அதைத் திறந்து வைத்து தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்திய அளவில், உலகளவில் foreigners-ம் வந்து பாராட்டக் கூடிய அளவிற்கு அந்தக் கண்ணாடி இழை பாலத்தை பொதுப் பணித் துறை யின்மூலம் கட்டித் தந்தவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய சாதனைகளில் முக்கியமானது அவர் சிற்பியாக இருந்து செதுக்கிய வள்ளுவர் கோட்டம். 1973-ல் கட்டத் துவங்கி, 1976-க்குப் பிறகு திறந்து வைக்கப்பட்டது. சுமார் ஐம்பதாண்டுகள் ஆகிவிட்டதால், பொதுப் பணித் துறையின்மூலம் அதைப் புதுப்பிக்கும் பணிகளையும் செய்து கொண்டிருக்கிறார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

Circuit House. எல்லா மாவட்டத்திற்கும் ஒரு Circuit House என்று அதைக் கட்டிக் கொண்டிருக்கிறோம். எல்லோரும் பயன்படுகிறார்கள். அதேநிலையில், நெடுஞ்சாலைத் துறை இரண்டு ஆண்டுகளில் 1,713 கோடி ரூபாயில் 14 by-pass சாலைகளை நெடுஞ்சாலைத் துறையில் செய்து கொண்டிருக்கிறார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். முதலமைச்சர் மேம்பாட்டு சாலை-16,500 கி.மீ. road, பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நெடுஞ்சாலைத் துறை சார்பில் போட்டிருக்கிறார். எங்களுடைய வேலூர் தொகுதிக்கு Pentland Hospital என்று ஒன்று இருந்தது. தற்போது அடுக்கம்பாறைக்கு போய் விட்டது. அதை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே ஓராண்டுக் காலத்தில் 7 அடுக்கு Multi-speciality Hospital-- அதைக் கட்டி பொதுப் பணித் துறையின் சார்பில் முடியும் தருவாயில் இருக்கிறது. என் தலைவருடைய பிறந்தநாள் நினைவாக அதைத் திறக்க விருக்கிறார்கள். அதற்கு முதலமைச்சர் அவர்களுக்கும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், நம்முடைய அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

தொகுதி கோரிக்கைகள்!

அதேபோல, 10 கோரிக்கைகளில் ஒரு கோரிக்கையாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேலூர் Library-க்கு இரண்டரை கோடி ரூபாய் தந்து அதைத் திறந்து வைத்திருக்கிறார்.

அதே நிலையில் National Theatre-லிருந்து சுரங்கப் பாதை பழைய by-pass-க்கு— அதேபோன்றுதான், Green Circle-ல் death எல்லாம் சென்றால் மிகவும் traffic ஆக இருக்கிறது. அதைச் செய்து தர வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். எல்லா சாதனையும் படைப்பவர் அதைச் செய்து தர வேண்டும்.

வேலூர் நேதாஜி மார்க்கெட். நேதாஜி மார்க்கெட்டிற்கு ஒரு floor கட்டித் தர வேண்டுமென்று நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, காட்பாடியிலிருந்து வந்தால் புது bus stand வழியில் ஒரு by-pass சாலை Collector Office-க்குப் போகலாம். அப்படிச் செய்தால் Green Circle வழியாக traffic குறைந்துவிடும். அதையும் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதே நிலையில், பெரியார் park-ஐ மீண்டும் மீட்டுத் தர வேண்டும் என்று சுற்றுலாத் துறையின் சார்பில் கேட்டுக்கொண்டு, பாதாள சாக்கடைத் திட்டம் 14 ஆண்டுகாலமாக செய்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய ஆட்சிக்கு வந்த 4 ஆண்டுகாலம்--அதையும் செய்து முடித்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய தொகுதிக் கோரிக்கைகளையும் செய்து தர வேண்டுமென்று கேட்டு, தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும், முதலமைச்சர் அவர்கள் 2026-லே வெல்வார், (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) வெல்வார், வெல்வார் என்று சொல்லி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. பேசினார்.

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட வைப்பூர் ஊராட்சியில், Full Creative பிரைவேட் நிறுவனமும், Our Shoulders Foundation அறக்கட்டளையும் இணைந்து CSR நிதி மூலம் புது தாங்கல் ஏரியை தூர்வாரும் பணிகள் கடந்த டிசம்பர் மாதம் தொடங்கப்பட்டு, பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கழக சுற்றுச்சூழல் அணியின் துணை செயலாளர் சாய் ஜெயகாந்த் பாரதி, கழக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் மாவட்ட துணை அமைப்பாளர் வல்லரசு செங்குட்டுவன், FULL creative பிரைவேட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர்கள் அமித், திருமதி.காவ்யா, Our Shoulders அறக்கட்டளையின் இயக்குனர்கள் மாணிக்கம்பாரதி, வீரசுதன், பிரேம்நாத் மற்றும் அறக்கட்டளையின் தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண்	ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர்	பணியின் விவரம்
187	மே.பொ./கொ&நி/வ.செ.அ.மி.நி	Self Cleaning strainer shell with ebonite rubber lining
188	மே.பொ./கொ&நி/வ.செ.அ.மி.நி	Journal head liner support bracket for HP803 mill
266	மே.பொ./கொ&நி/வ.செ.அ.மி.நி - 2	விளிம்பிட்டையுடன் கூடிய உருளைத்தண்டு குழாய்கள் - மின் - கொள்முதல் செய்தல் சம்பந்தமாக.

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சுபர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்:
www.tangedco.gov.in, www.tntenders.gov.in, www.tenders.tn.gov.in

செ.ம.தொ.இ/1314/ஒப்பந்தப்புள்ளி/2025

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

செ. மாதவன்

ஏப்ரல் 3 (2018)

திராவிட இயக்கக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்ட இவர், கழகம் துவங்கிய போது, அதில் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டு பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோருடன் இணைந்து பணியாற்றியவர்.

1962லேயே சட்டமன்ற உறுப்பினராக கழகத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், கழகம் முதன்முதலாக பேரறிஞர் அண்ணா தலைமையில் தி.மு.க. அமைச்சரவை அமைந்த போது 9 பேர் கொண்ட முதல் அமைச்சரவையில் சட்டம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சராக பதவி வகித்து, கழகக் கொள்கைகளான சுயமரியாதை திருமணச் சட்டம், ஜமீன் ஒழிப்புத் திருத்தச் சட்டம் ஆகியவற்றை நிறைவேற்றியதோடு, கழக ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்பட்ட பல புரட்சிகரமான சட்டங்கள் வெளிவர முக்கிய காரணமாக இருந்தவர்.

அறிஞர் அண்ணா மறைவுக்குப் பின்னர், தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றபோது, அவரது அமைச்சரவையில் சட்டம் மற்றும் தொழில் ஆகிய துறை அமைச்சராக பதவி வகித்து தலைவர் கலைஞர் அவர்களின் எண்ணப்படி, தமிழகம் முழுவதும் 22க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளை நிறுவி, தமிழகத்தில் தொழில் புரட்சியை ஏற்படுத்தி காட்டியவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கல்லணை காத்தான்

ஏப்ரல் 3 (2005)

தஞ்சை மாவட்டம், கல்லணைக்கு அருகில் பாதிரக்குடி எனும் கிராமத்தில் பிறந்த இவர், தனது இளமைக் காலம் முதல் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், ஆகியோரின் அடியொற்றி, கிளைக் கழகச் செயலாளராகவும், 1974 முதல் 1984 வரை பூதலூர் ஒன்றிய பொருளாளராகவும், 1984 முதல் 2005 வரை ஒன்றியச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

திருவையாறு நிலவள வங்கி தலைவராகவும், திருக்காட்டுபள்ளி அக்னிஸ்வர ஆலய அறங்காவலர்குழு தலைவராகவும் பதவி வகித்தவர்.

ஈழத்தமிழர் பிரச்சினை, சட்டநகல் எரிப்பு போன்ற போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றதோடு, கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

"கல்லணைக் காத்தான், கழகத்தைக் காத்தான்" என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.